| Headline | PM: More direct involvement of society in Asean activities | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 09 Apr 2014 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 2 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 355 cm² |
| Journalist | NULL | AdValue | RM 874 |
| Frequency | Daily | PR Value | RM 2,622 |



# ஆசியானில் மக்கள் பங்களிப்புக்கு முக்கியத்துவமளிக்கப்படும் — நஜிப்



கோலாலம்பூர், ஏப். 9-

ஆசியானின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் மக்கள் பங்கேற்பைப் பிரதிபலிக்கும் அம்சங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் தெரிவித்தார்.

வரும் 2015ஆம் ஆண்டு ஆசியான் மாநாட்டை ஏற்று நடத்தப்போகும் நாடு என்ற வகையில் ஆசியானின் அனைத்து நடவடிக்கைகளிலும் மக்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

'மக்களை அடிப்படையாகக் கொண்ட ஆசியான் ' என்ற கருப்பொருளில் அடுத்த ஆண்டுக்கான ஆசியான் மாநாட்டை மலேசியா நடத்தவிருக்கிறது. ஆசியான் நடவடிக்கைகளில் பலதரப்பட்ட மக்களின் பங்களிப்பையும் நேரடியாக ஊக்குவிக்கும் இலக்கை ஈடுசெய்யத் தக்க மாநாடாக இது அமையப் பெற வேண்டும்.

ஆக்கப்பூர்வமான-பொறுப்பான்மையான நிர்வாக நடைமுறை, சிறந்தமுறையிலான வாழ்க்கைத் தரம், சுற்றுச்சூழல் பராமரிப்புமுறையில் வலுவாக்கம், மகளிர் முன்னேற்றத்தை ஊக்குவிப்பது, அனைத்துத் தரப்பினருக்கும் சமமான வாய்ப்பைக் கூடுதலாக வழங்குவது போன்ற மக்களின் கனவை நனவாக்கக் கூடிய முக்கிய ஆயுதமாக இந்தக் கருப்பொருள் அமைந்திருக்கிறது என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நிபுணத்துவர்களையும் வல்லுநர்களையும் ஒன்று திரட்டும் களமாக மட்டுமே ஆசியான் இனி செயல்படாது. மாறாக மக்களை உண்மையிலேயே முன்னேற்றக் கூடிய வாய்ப்பை வழங்கும் மேடையாக ஆசியான் அமைந்திருக்கும்.

'ஆசியான் அனைவருக்கும் சொந்தமானது' என்ற தோற்றத்தை உண்மையாக்கும் நிலையை ஆசியான் மாநாடு உருவாக்க வேண்டும். தலைநகரில் நேற்று 2015ஆம் ஆண்டுக்கான ஆசியான் தலைமைத்துவக் கருத்தரங்கம் என்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இலக்கை அடையப்பெறுவதற்கான நோக்கத்தை மட்டுமே முதன்மையாகக் கொண்ட ஜனநாயக, நிர்வாக நடைமுறை நெருக்குதல்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முடியாது. அரசியல், பொருளாதார முக்கியத்துவங்களையும் ஆசியான் கொண்டிருப்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

ஆசியான் வடிவமைப்பிலும் அதன் உறுதிமொழி அமலாக்கங்களிலும் அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்பையும் ஊக்குவிக்கும் அம்சங்களுக்கு முக்கியத்துவமளிக் கப்படும்.

மக்களின் தேவை என்னவென்பதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டக் கூடிய விஷயமாக இது அமைந்திருக்கும். ஆசியானில் மக்களின் நேரடி பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் இந்த இலக்கு நனவாகும் என்ற நம்பிக்கை தமக்கு வலுவாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் சொந்த ஆசாபாசங்களைப் புலப்படுத்தக் கூடிய அமைப்பாக ஆசியான் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமது நோக்கம் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

உலகளாவிய விவகாரங்களில் ஆக்கப்பூர்வ பங்களிப்பை மக்களுக்கு ஊக்குவிக்கத் தக்க அம்சமாக இந்த ஆசியான் விளங்க வேண்டும் என்பதே எல்லாருடைய கனவுமாகும் என்றார் அவர்.

இந்த இலக்கு ஈடேறுவதற்கு ஆசியான் செயற்குழு முறையாக நிர்வகிக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். ஆசியான் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் இந்தப் பராமரிப்புக்காக 170 கோடி வெள்ளியை நிதியாக வழங்குகின்றன என்ற விவரத்தையும் அவர் கூறினார்.

Powered by: iSENTIA